பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கனிமங்கள் வெட்டி எடுக்கப்படுகிறபோது, லோக்கல் செஸ் மற்றும் லோக்கல் செஸ் சர்சார்ஜ் என்று 295 விழுக்காடு வசூலிப்பதற்கு ஏற்பாடு நடந்ததாகவும், அதை எதிர்த்து நீதிமன்றத்திற்குச் சென்றதாகவும் செய்திகள் வந்தன. இப்போது அதனுடைய நிலைமை என்ன? அது சரியாக வரவில்லையென்றால், மற்ற மாநிலங்களிலே இருப்பதைப் போல, 'மினரல் டாக்ஸ்' என்று செண்ட் பர்செண்ட் போட்டு, அதை உரிய பஞ்சாயத்துக்களுக்கு நிதியாதாரமாகத் தருவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த வினாவிலே இந்தப் பிரச்சினை எழவில்லை. இதற்குத் தனிக் கேள்வி கேட்டால், விவரமறிந்து, விளக்கமாகப் பதில் அளிக்க இயலும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கருங்கல் தொழிற்சாலையைத் தனியாருக்கு ஏலம் விடுகின்றபோது, ஏலம் எடுக்கின்ற தனியார்கள் சொந்தமாக, அதை பாலீஷ் செய்கின்ற தொழிற்சாலை அமைக்க வேண்டும் என்கிற ஒரு விதி இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மையா? அப்படி இருந்தால், அதைத் தளர்த்தி, இல்லாதவர்களுக்கும் குத்தகை விட அரசு முன் வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்கின்ற நிலையில், குத்தகை எடுத்தவர்கள், இரண்டு ஆண்டுக்குள் தொழிற்சாலையை அமைக்கவேண்டும் என்ற ஒரு நிபந்தனை இருப்பதை இன்றைக்கே இரண்டு முறை சொல்லியிருக்கிறேன். இப்போது திரு. திருவேங்கடம் அவர்கள் மூன்றாவது முறையாகக் கேட்கிறார். இப்போதும் சொல்கிறேன். இந்தக் கல்லைக் குத்தகைக்கு எடுக்கின்றவர்கள்இரண்டுஆண்டுக்குள்அதற்கான தொழிற்சாலையை அமைக்கவேண்டும் என்று இருக்கிறது. அதைத் தளர்த்த வேண்டும், முடியுமா என்று கேட்டிருக்கிறார். அது இயலாது.

தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தால் வாங்கப்பட்ட நவீன அச்சு இயந்திரம்.

*1630 திரு. கோ. பூவராகன் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்குப் பல லட்ச ரூபாய் செலவில் வாங்கப்பட்ட நவீன அச்சு இயந்திரம் முழுமையாக பயன்படுத்தப்படாத சூழ்நிலை இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

1990 மே, 2]

(ஆ) அது பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தினால் வாங்கப் பட்ட நவீன அச்சு இயந்திரம் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அது எத்தனை இலட்சம் ரூபாய்க்கு வாங்கப்பட்டது? என்னென்ன வேலைகள் நடைபெறுகின்றன? பல்கலைக் கழகத்தினுடைய வேலைகள் மட்டும் நடைபெறு கின்றனவா? மற்றும் வேறு இடங்களிலிருந்து அது சம்பந்தமாக அதற்கு வேலைகள் வாங்கப்பட்டு, அச்சிடப்பட்டு வெளியிடப் படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பல்கலைக் கழகம் ஒரு தன்னாட்சி நிறுவனம். ஒரு அச்சுப் பொறியைப் பயன்படுத்துவது அவர்களுடைய பொறுப்பு. ஆனால் விவரங்கள் தந்திருக்கிறார்கள். அது 11,25,138— ரூபாய்க்கு வாங்கப்பட்டது. அது ஒரு சிறப்பு வகையான அச்சு இயந்திரம். அந்தச் சிறப்பு வகையான அச்சு இயந்திரம் பல்கலைக் கழகத்தால் அச்சிடப்படுகிற நூல்களை அச்சிடப் பெருமளவிற்குப் பயன்படுத்தப்படுகிறது. அரசாங்கத்திலே இருந்து அல்லது வேறு தமிழ்த் துறையிலே இருந்து ஒன்றிரண்டு நூல்கள் அச்சிடுவதற்கும் அவர்களிடத்திலே வழங்கப்பட்டிருக் கிறது. முழு அளவிலே அது செயல்படுவதாக அண்மையிலே வந்த அவர்களுடைய குறிப்பு தெரிவிக்கிறது.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அது ஒரு நவீன இயந்திரம் என்ற காரணத்தி னாலே முழுமையாக அந்தப் பல்கலைக் கழகம் அதைப் பயன்படுத்த முடியவில்லை. அதனால்தான் வேறு இடங்களிலே அதுபோன்ற வேலைகள் ஏதாவது கிடைக்கும் என்று சொன்னால் அந்தப் பல்கலைக் கழகம் அதனைப் பெற்று நல்ல முறையிலே முழுமையாக அதைப் பயன்படுத்துவதற்கு ஏற்பாடு செய்வதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அவர்களுக்கு அந்த உரிமை இருக்கிறது. அவர்களுக்குக் கிடைக்கிற வாய்ப்பைப் பொறுத்து பயன்படுத்துவார்கள்.